தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1979 மார்ச் 30.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்.

*குறுகிய கால வினா எண் 29.—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு பரிசுத்திட்டம் திருத்தியமைக்கப் பட்டுள்ளதா?

(ஆ) திருத்தியதின் நோக்கம் என்ன?

(இ) அதனால் ஏற்பட்ட பலன் என்ன?

(ஈ) பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை விரைவில் கிடைக்க எடுக்கப்பெற்றுள்ள நடவடிக்கை யாது?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்).

(அ) ஆம்.

(ஆ) பரிசுத் தொகையைக் குறைத்து, பரிசுகளை அதிகரித்து அதிக மக்கள் பயன் பெற வேண்டும் என்பதுதான் நோக்கம்.

(இ) 1. சாதாரண குலுக்கலில் ஒவ்வொரு வரிசைக்கும் 2,634 பரிசுகள் என்று இருந்தது 2,655 பரிசுகள் என்றும், சிறப்புக் குலுக்கலில் 10 வரிசைகளுக்கும் 12,562 பரிசுகளாக இருந்தது 13,075 பரிசுகள் என்றும் உயர்த்தப் பட்டுள்ளன.

2. மேலும் மொத்தப் பரிசுத்தொகை சாதாரணக் குலுக்கலில் 3.49 இலட்சம் ரூபாயாக இருந்தது 3.90 இலட்சம் ஆகவும், சிறப்புக் குலுக்கலில் மொத்தப் பரிசுத் தொகை 37.50 இலட்சம் ரூபாயாக இருந்தது 41.00 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

3. இம்மாதிரி பரிசுத் தொகைகளையும் பரிசு எண்களையும் உயர்த்தியதால் தமிழக அரசு பரிசுத் திட்டம் மக்களிடையே மிகவும் அதிக அளவில் பிரபலமடைந்துள்ளது.

(ஈ) பரிசு பெற்றவர் விண்ணப்பித்த 15 நாட்களுக்குள் பரிசுத் தொகை கொடுக்கப்பட வேண்டும் என்று உத்திரவிடப் பட்டுள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பரிசு பெற்ற அதிருஷ்டசாலிகள் அந்தப் பரிசைப் பெற வழிமுறை யாது அதனை எங்கு பெற வேண்டும்?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்). பரிசுத் தொகையைக் குலுக்கல் தேதியிலிருந்து ஒரு மாதத திற்குள் பெற வேண்டும். ஒரு மாதத்திற்குள் பெறாவிட்டால், இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு அவர்களுக்கு ஸ்பெஷல் அப்ளிகேஷன் போட்டு பெற்றுக் கொள்ளவேண்டும். சிறப்புப் பரிசையும் இரண்டாம் பரிசையும் இயக்குநர், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு அவர்களிடமிருந்து பெற வேண்டும். மற்றப் பரிசுகளை அந்தந்த மாவட்டங்களிலுள்ள துணைக் கருவூலங்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. ஆர். மணிமாறன் : இந்தப் பரிசுத் திட்டம் திருத்தியமைக்கப்பட்ட பிறகும் அதற்கு முன்பு இருந்த நிலைமைக்கும் இடையில் இருக்கும் வித்தியாசங்கள் என்ன என்பதை அரசு அறிவிக்குமா? திருத்தியமைக்கப்பட்ட பிறகு விற்பனை எண்ணிக்கை அதிகரித்திருக்கிறதா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : திருத்தியமைக்கப்பட்ட பிறகு சாதாரண குலுக்கலில் ஒவ்வொரு வரிசைக்கும் 2,634 பரிசுகள் என்று இருந்தது 2,655 பரிசுகள் என்றும், சிறப்புக் குலுக்கலில் 10 வரிசைகளுக்கும் 12,562 பரிசுகளாக இருந்தது 13,075 பரிசுகள் என்றும் உயர்த்தப்பட்டுள்ளது. பரிசுத் தொகை சாதாரணக் குலுக்கலில் 3.49 லட்சம் ரூபாயாக இருந்தது 3.90 லட்சம் ரூபாயாகவும் சிறப்புக் குலுக்கலில் மொத்தப் பரிசுத் தொகை 37.50 லட்சம் ரூபாயாக இருந்தது 41.00 லட்சம் ரூபாயாக

1979 மார்ச் 30]

உயர்த்தப்பட்டுள்ளது. ஆகையால், இப்போது பரிசுச் சீட்டுகள் அதிகமாக விற்பனையாகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : பரிசுச் சீட்டுத் திட்டம் மாநிலம் தழுவிய ஒரு பரிசுத் திட்டமாக இருக்கும் காரணத்தால் சில பல காரணங்களால் சில மாவட்டங்களில் இருப்பவர்களுக்குப் பரிசுத் தொகை கிடைக்க இயலாமல் போய்விடுகிறது. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித் தனியாகப் பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் கொண்டு வர அரசு ஆலோசிக்குமா ?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): அந்த ஆலோசனை இப்போது இல்லை.

திரு. க. மருதாசலம் : வருகிற சிறப்புக் குலுக்கல் எந்த மாவட்டத்தில் நடைபெற இருக்கிறது? தொழிலாளர்கள் நிறைந்த மாவட்டமான கோவை மாவட்டத்தில் அப்படிப்பட்ட சிறப்புக் குலுக்கலை நடத்த அரசு உத்தேசிக்குமா? வேறு மாநிலப் பரிசுச் சீட்டுகள் நம்முடைய மாநிலத்தில் விற்கக்கூடாது என்று அரசு ஆணை இருந்தும்கூட அதையும் மீறி சில விற்பனையாளர்கள் வெளி மாநிலப் பரிசுச் சீட்டுகளை விற்று வருகிறார்கள். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): இந்தச் சிறப்புக் குலுக்கல் நாகர்கோயிலில் நடைபெற இருக்கிறது. கோவையில் நடத்தப்படுமா என்று உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி பரிசீலிக்கப்படும். மற்ற மாநிலப் பரிசுச் சீட்டுகள் விற்பனை தடை செய்யப்படுமா என்ற கேள்விக்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. சோ. அழகர்சாமி : அரசு நடத்தும் பரிசுத் திட்டத்தின் வாயிலாக சென்ற ஆண்டு 1977–78-ல் செலவு போக அரசுக்குக் கிடைத்த நிகர லாபம் என்ன? இந்த ஆண்டு மார்ச் முடிய கிடைத்த லாபம் என்ன? எந்த வகைகளுக்காக சென்ற ஆண்டு செலவழிக்கப்பட்டது? இந்த ஆண்டு எதற்காகச் செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மூலக் கேள்வி பரிசுத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறதா என்பது. ஆகவே, இந்தத் தகவல்கள் இல்லை.